# அவதாரங்களும் ஆழ்வார்களும்



ஜெய் ஸ்ரீமன் நாராயணா

ஆழ்வார் எம்பெருமானார் தேசிகன் திருவடிகளே சரணம்

எம்பெருமானின் தசாவதாரங்கள் வரிசையில் இன்று பக்த பிரகலாதனின் பேரன் அசுரராஜன் மகாபலியின் ஆணவத்தை அடக்க வேதிய குலத்தில் ஸ்ரவண நட்சத்திரம் கூடிய விஜயதுவாதசியில் சியாமளமேனியனாய் குள்ள உருவில் சிறு பாலகனாய் வாமனன் என்ற பெயரில் அவதரித்து பின் பூமிக்கும் வானுக்குமாய் ஓங்கி உலகளந்த உத்தமன்

த்ரிவிக்கிரமனாய் ஈரடியில் மூவுலகையும் அளந்து தன் மூன்றாவது அடியை பலியின் சிரஸில் வைத்து செருக்கொழித்து அழுத்திய ஐந்தாவது அவதாரமான வாமன (த்ரிவிக்கிரம) அவதாரத்துடன், அபிநவ தசாவதாரமான ஆழ்வார்களின் வரிசையில் எம்பெருமானின் திருமறுவான ஶ்ரீவத்ஸத்தின் அம்சமாய் கார்த்திகை ரோஹிணியில், நெற்கதிரில் அவதரித்து யாழ் கொண்டு பாடும் பாணர் குலத்தில் வளர்க்கப்பட்ட அனுதினமும் யாழும் கையுமாக அரங்கனையே திருவடி முதல் திருமுடி வரை பாடித்துதித்து. "அண்டர் கோனணியரங்கன் என்னமுதினைக் கண்ட கண்கள், மற் றொன்றினைக் காணாவே" என முடியும்



அமலனாதிபிரான் என அழகான பத்து பாசுரங்கள் கொண்ட திவ்யபிரபந்தத்தை அருளிய திருவரங்கனுடன் ஐக்கியமான திருப்பாணாழ்வாருக்கும் உள்ள ஒற்றுமைகளை அறிவோம்.

5.வாமனவதாரமும் திருப்பாணாழ்வாரும்

எம்பெருமானின் அவதார உருவங்களுள் மிகச்சிறியது வாமனவதார திருமேனி. யாழ் இசைத்து பாடும் பாணர் குலமெனும் சிறிய குலத்தில் வளர்ந்தவர் திருப்பாணாழ்வார். மஹாபலியிடம் குறுகி யாசித்தலாகிய சிறு செயலை புரிந்தார் வாமனனாய். பத்தே பாசுரங்கள் கொண்ட மிகச் சிறிய பிரபந்தத்தை பாடினார் திருப்பாணாழ்வார். வாமனன்

திரிவிக்கிரமனாகிப் பெரியனாய் வளர்ந்தான். இந்த ஆழ்வாரோ பழமறையின் பொருளையெல்லாம் அடக்கி அமலனாதிபிரான் எனும் பிரபந்தத்தை அருளி பெரியராய் வளர்ந்தார். வாமனன் திரிவிக்கிரமனாய் பலியின் தலையில் தன் திருவடியை வைத்து அவன் செருக்கை அழித்து 'பலிமதநன்' எனப்பெயர் பெற்றான்.



## <u>திருப்பாணாழ்வார்</u>

திருப்பாணாழ்வார் முனிவர் லோகசாரங்கரின் தோள்களில் அடிவைத்து ஏறி அவர் செருக்கொழித்து 'முனிவாஹனர்' எனப்பெயர் கொண்டார். கடைசியாக வாமனவதாரத்தில் அசுரகுரு சுக்கிராச்சாரியார் வாமனன் பெருமையை உணர்ந்தார். திருப்பாணாழ்வார் பெருமையை லோகசாரங்க முனிவர் உணர்ந்தும் கொண்டார். இப்படி பல ஒற்றுமைகள் இவ்விரு அவதாரங்களில் உள்ளது. இவற்றை போற்றி சேவித்து நீங்காத செல்வம் நிறைந்து வாழ்வோமாக!!

(Ref. from ஸ்ரீ வங்கீபுரம் ஸ்வாமி நவநீதம் ஸ்ரீராமதேசிகாசார் அவர்களின் அபிநவ தசாவதாரம் கட்டுரை)

(தொடரும்...)

அடியேன் தாஸன்

சித்ரா அமுதன்

(Vadodara)

